**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**C021 இலக்கணம் - 1 (எழுத்து)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழ்மொழியில் முப்பாற்புள்ளி என்று அழைக்கப்படும் எழுத்து யாது?
2. வல்லின மெய் எழுத்துகள் சொல்லுக்கு இறுதியில் வருமா?
3. மென்தொடர்க் குற்றியலுகரத்திற்கு ஒரு சான்று தருக.
4. மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்?
5. மேல் இதழும் கீழ் இதழும் ஒன்றோடு ஒன்று பொருந்திடப் பிறக்கும் மெய்கள் எவை?
6. வல்லின மெய்களின் பிறப்பிடம் எது?

7. தமிழில் ஓர் எழுத்து மொழியாக நன்னூலார் குறிப்பிடும் எழுத்துகள் மொத்தம் எத்தனை?
8. நன்னூல் குறிப்பிடும் இறந்த கால இடைநிலைகள் யாவை?
9. 'பால் குடித்தான்' - இதில் மறைந்துள்ள வேற்றுமை உருபு எது?
10. தமிழில் மெய் எழுத்துகள் சொல்லுக்கு முதலில் தனித்து வருமா?
11. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன்னர் வரும் எந்த மெய்கள் மிகும்?
12. வயிறு + பசி – சேர்த்து எழுதுக.
13. தனிக்குறில் முன்வரும் மெய், உயிர்வரின் எவ்வாறு ஆகும்?
14. பொற்றாமரை - பிரித்து எழுதுக.
15. மரத்துக்கிளை - இதில் வந்துள்ள சாரியை எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
2. யகர மெய்யும், வகர மெய்யும் எந்தெந்த உயிர் எழுத்துகளுடன் சேர்ந்து மொழி முதலாகும்? சான்று தருக.
3. நன்னூலார் கூறும் எழுத்துப் பிறப்பின் பொதுவிலக்கணம் யாது?
4. தொகைநிலைப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவற்றைச் சான்றுடன் குறிப்பிடுக.
5. விட்டிசை என்றால் என்ன? அது எவ்வாறு தோன்றாமல் தடுக்கப்படுகிறது?
6. 'சுவைப்புளி முன் இன மென்மையும் தோன்றும்' - இந்நூற்பாவைச் சான்றுடன் விளக்குக.
7. 'தேன்' என்னும் சொல் வருமொழிகளோடு புணரும் முறையைச் சான்று காட்டி விளக்குக.
8. பொதுச்சாரியைகள் எவையெனக் குறிப்பிட்டுக் கூறி, அவற்றுள் இரண்டனுக்குச் சான்று தந்து விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சார்பெழுத்துகள் என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) உயிர் எழுத்துகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியமும் நன்னூலும் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2\. (அ) பகுபத உறுப்புகளில் விகுதியும், பகுதியும் காலம் காட்டும் முறையைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி பற்றி நன்னூலார் கூறும் கருத்துகளைச் சான்றுடன் விளக்குக.

3\. (அ) உயிர்முன் உயிர் வந்து புணரும் புணர்ச்சி பற்றி நன்னூலார் கூறுவனவற்றைச் சான்று தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ணகர, னகர மெய் ஈற்றுப் புணர்ச்சி விதிகளாக நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.